# ஆசிய இளைஞர்களுக்கு செவிமடுப்போம்

பல ஆண்டுகளாக இளம் ஆசியர்கள் தெய்ஸேக்கு வருகை புரிந்துள்ளனர். மற்றும் 'நம்பிக்கையின் திருப்பயணம்' பல்வேறு ஆசிய இளைஞர்களை ஒன்றுசேர்த்து வருகிறது. நம் சமூக இளைஞர்களில் சிலர் பங்களாதேசத்திலும், தென் கொரியாவிலும் வசித்து வருகின்றனர். பிற சகோதரர்களும் இக்கண்டத்திற்கு தொடர்பயணங்களை மேற்கொள்கின்றனர்.

அக்டோபர், நவம்பரிலும் நம்மில் சிலர் மியான்மர், சீனா, வட மற்றும் தென் கொரியா, இந்தியாவிற்கும் சென்றனர். இப்பயணங்களின் வாயிலாக, நான் ஆசித்தது எல்லாம், கிறிஸ்துவின் காரணமாக சமாதானத்திற்கும், நீதிக்கும் யார் செயல்படுகிறார்களோ அவர்களுடைய சூழல்களை சிறப்பாக புரிந்துகொண்டு, நமது ஒற்றுமையை காட்டவேண்டுமென்பதுதான். அவர்களோடு தங்கி இருந்து, சில கேள்விகளோடு திரும்பி வந்தோம். அந்த கேள்விகள் நாம் அவர்களின் நிலைமையைப் புரிந்து கொள்வதற்கும், ஒவ்வொருவரைப் பற்றி சிந்திப்பதற்கும் உதவியாயிருக்கும்.

**மியான்மரில்**, மக்களாட்சிக்கான இயக்கத்தின் மேல் மிகப்பெரிய நம்பிக்கை இருக்கிறது. சில கிறிஸ்துவர்கள் எதிர்காலத்திற்காக தயாராகும் வகையில் 'மக்களாட்சிக்கான கல்விக்கு' உறுதுணையாக இருக்கிறார்கள்.

'எங்களுக்கு தேவை - முன்னேற்றமும், கல்வியும் தான்' என்று ஒருவன் கூறுகிறான். இன்னொருவனோ 'அனைத்திற்கும் மேலாக கருணைதான் தேவை' என்கிறான்.

இந்த அழகான நாட்டிற்கு 'புரிதலில் பிரிவு' என்பது அதன் சிறப்பம்சமாகும். ஆனால் பல குழுக்களும், சமுதாயங்களும் வெல்லமுடியா பிணக்குகளை அனுபவித்து வருகிறார்கள், இருப்பினும் அவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கான தீர்வுகளையும் முயற்சிக்கிறார்கள். இயற்கை வளங்கள் அபரிதமாக இருந்தும், உள்ளூர்வாசிகள் அவைகளினின்று பயன்பெறுவதில்லை.

- **அனைவருக்கும் ஒரு கேள்வி நம்முடைய நாடுகளில் மக்களாட்சியை வலுப்படுத்த நாம் என்ன செய்ய வேண்டும் ?**

**பீஜிங், சீனாவில்**, ஒரு செப கூட்டம் 150 இளைஞர்களை ஒன்று திரட்டியது. அவர்களில் ஒருவர், நாம் தெரிந்துகொள்ள வேண்டுமெனறு விரும்பியது இதுதான் நம் பொருளாதார முன்னேற்றமே, உண்மை நிலவரத்தின் மேற்பரப்பு. உண்மையில் மக்களுக்குள் வெற்றிடம்தான் உள்ளது, ஏனெனில் முறையான வழிகாட்டிதலோ, புரிதலோ இல்லை.

- **அனைவருக்கும் ஒரு கேள்வி என் வாழ்க்கைக்கு பொருள் மற்றும் வழிகாட்டுதல், பொருளாதார செழுமையை தவிர, அது அளிப்பது என்ன?**

அங்கிருந்து, என் சகோதரர் ஒருவரோடு நான் **வட கொரியாவிற்கு** பறந்தேன். உலகின் அப்பகுதியில் கொடூரமான பனிப்போர் நடந்துகொண்டிருந்தது. தென் மற்றும் வட கொரிய மத்தியில் நிலைக்கும் விரிசல், எண்ணிலடங்கா மக்களிடையே ஆழமான காயத்தை நிலைத்திருக்க செய்துள்ளது.

வட கொரியாவுடனான எங்களுடைய பிணைப்பு, 1997 வரை பின்நோக்கி அழைத்துச் செல்கிறது. அப்போது, கொடூரமான பஞ்சம் பல இறப்புக்களுக்கு காரணமாய் இருந்தது. அந்த காலத்தில், சகோதரர் ரோஜரின் முயற்சியால், பல ஆயிரம் டன் உணவுப்பொருட்களை அனுப்ப முடிந்தது. பிறகு, "நம்பி க்கையின் செயல்பாடு" மூலம், நாங்கள் மருத்துவமனைகளுக்கு உதவிபுரிய ஆரம்பித்தோம். ஐரோப்பாவில் உள்ள சில வட கொரிய மருத்துவர்களுக்கு பயிற்சி முகாம்களை வழிநடத்தினோம். ஒரு சகோதரர், பலமுறை அந்நாட்டிற்கு பயணித்தார். இதனால், மகத்துவமிக்க மனித தொடர்புகள் உருவாக்கப்பட்டன.

இன்று தேவைகள் அதிகம். அந்த நாடு கொடூரமாக தனிமைப்படுத்தப் பட்டுள்ளது. பியாங்யாங்கில், நாங்கள் வட கொரிய செஞ்சிலுவை பிரதிநிதி களால் வரவேற்கப் பட்டோம். நான் அவர்களிடம் கூறினேன், 'தெய்ஸே என்பது ஒரு தொண்டு நிறுவனம் அல்ல, ஆனால் அது ஒரு துறவற சமூகம். பொருளுதவிகளுக்கும் மேலாக, தனி மனித பிணைப்புகள்தான் எங்களுக்கு மிக முக்கியத்துமானவை என்று'.

வார நாட்களில் கோவில்கள் மூடியிருந்தாலும், அங்கு செல்வதை நாங்கள் தவிர்க்கவில்லை. பியாங்யாங்கில் உள்ள ஒரே ஒரு கத்தோலிக்க கோவிலில் மட்டும், எங்களை ஒரு குடும்பத்தலைவர் (அங்கு குருவானவர் இல்லை) வரவேற்றார்.

இரண்டு பிரிவினை சகோதர கோவில்களுள் ஒன்றில் ஒரு பாஸ்டரும், ரஷ்ய ஆர்த்தொடாக்ஸ் கோவிலில், அங்கிருந்த இரண்டு குருக்களில் ஒருவரும் வரவேற்றனர்.

அந்த கோவில்களில் நாங்கள் அமைதியாக செபித்தோம். அந்த மௌனம், மிக சக்திவாய்ந்த ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. அந்நாட்டிற்கு, அனைத்திற்கும் மேலாக, அந்த மௌனத்தைத்தவிர வேறு என்னதான் கொண்டுசென்றிருக்க முடியும்?

- **அனைவருக்கும் ஒரு கேள்வி, இந்த சந்திப்புகளின் வாயிலாக, அருகாமையில் (அ) தொலைவில் நிலவும் தனிமைத்துவ சூழல்களின் கடினத்தை குறைக்கமுடியுமா?**

தென் கொரியா பூஷனில் உலக ஆலயங்களின் கூட்டமைப்பில் பங்கேற்றோம். பல்வேறு தரப்பு கிறித்துவர்களின் பங்கேற்ப்பு மிகவும் அழகாகவும்,

அறிவார்ந்ததுமாக இருந்தது. எனினும், என் இதயத்திலிருந்து இக்கேள்வியை களைந்தெறிய முடியவில்லை 'ஏன் நாம் பிரிந்தே இருக்கிறோம்?'

அனைவருக்குமான கேள்வி என்னுடைய தேசத்தில், இன்னும் பல இணைப்புக்களை உருவாக்க வாய்ப்புள்ளதா? குறிப்பாக, பழமை வரலாற்றுத் திருச்சபைகளையும், புதிய திருச்சபையைச் சார்ந்தவர்களாகிய இவாஞ்ஜலிக்கல் மற்றும் பெந்தகோஸ்தே சபையினரையும் இணைக்கமுடியுமரி.

என்னுடைய இறுதிப்பயணம், **இந்தியாவிற்கு** அழைத்துச்சென்றது. முதலில், வசை (மும்பைய்)க்கு அருகே ஒரு தீவின்மேல் உள்ள ஒரு நகரம். அங்கே 5,500 இளைஞர்கள் கூடினார்கள். எங்கே கூட்டம் கூடியதோ, அங்கே செல்லும் வழியின் முடிவில், நடை பயணமாகத்தான் செல்லவேண்டிய நிலை.

வழியில் என்ன ஆச்சரியம் அங்கே ஒரு ஹிந்து குடும்பம். அவ்வீட்டிற்கு முன்பாக 'நல்வரவு' என எழுதப்பட்டிருந்தது. ஒரு இளைய கிறிஸ்தவன் கூறினான் 'எங்களுடைய மத திருவிழாக்களில், எங்களுடைய பரஸ்பர மரியாதையை, உணவை பகிர்ந்து உண்டும், நடைமுறை உதவிகளை செய்தும் வெளிப்படுத்துவோம்'. அந்தத்தீவில், பலர் மீனவர்கள் ஆவார்கள். சிறிய படகுகளில் மீன் பிடிக்கச் செல்வார்கள். வாரக் கணக்கிலும், நாட்கணக்கிலும் செல்லுவர், ஆனால் திரும்பி வருவது என்பது வியப்பாயிருக்கும். இவ்வாறு, கடந்த ஆண்டு, ஒரு படகு திரும்பிவரவேயில்லை. கிளம்புவதற்கு முன், கிறிஸ்துவனாகட்டும், ஹிந்துவாகட்டும், கிறிஸ்துவ கோவிலுக்கு சென்று ஆசீர் பெறுவார்கள்.

- **அனைவருக்கும் கேள்வி பிற மதங்களை விசுவசிப்பவர்களுக்கு, என் மரியாதையை எப்படி வெளிப்படுத்துவது? அவ்வாறு வெளிப்படுத்தும் பொழுது, அது அமைதியின் சாரமா (அ) கொடூரத்தின் வெளிப்பாடா ?**

**மும்பையில்**, இளைஞர்கள் திறந்தவெளி செபக்கூட்டத்தைக் கூட்டினார்கள். அதில், 3,000 மக்கள் பங்கேற்றனர். பேராயர் ஆஸ்வால்ட் க்ராசியஸ் எங்களுக்கு கூறினார் 'நகரம் 19 மில்லியன் நகர வாசிகளைக் கொண்டது. அதிவேக வளர்ச்சிப்போக்கில் இருந்தும், பாதிக்கும் மேற்ப்பட்டோர் இன்னும் வறுமையில் வாழ்கின்றனர்'.

தாராவி, ஏழை மாவட்டங்களில் பெரிது. அங்கே ஒரு குருவானவர், எங்களை இன்முகத்தோடு வரவேற்றார். இளைஞர்களின் வழிகாட்டுதலோடு நாங்கள் குடும்பங்களை சந்தித்தோம். உயிர் வாழ கைக்கும் வாய்க்கும் போராட்டம் போட வேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்த புதினத்தைப் பாருங்களி செபிப்பதற்கும், துணையாக இருப்பதற்கும் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி செபிக்கின்றனர். இயல்பான செப வழிபாட்டிற்கு இளைஞர்கள் ஒன்று கூடுகின்றனர்.

இம்மாதிரியான நகரங்களின் எதிர்காலம் எப்படி இருக்கும் ? பல்வேறு நிலைகளில் வளர்ச்சி இருந்தாலும், சில நேரங்களில் போக்குவரத்து வாழ்க்கையை ஸ்தம்பிக்க வைக்கிறது. நகர வளர்ச்சி திட்டங்களால், மக்களின் எதிர்ப்பார்ப்புக்களை சமாளிக்க இயலவில்லை.

- **அனைவருக்கும் கேள்வீ என்னுடைய நகரத்திலோ (அ) பகுதியிலோ, சிறந்த கூட்டுவாழ்க்கைக்கு உத்வேகம் கொடுக்கும் மக்களை நான் அறிந்து கொண்டேனா (அ) அவர்களின் முயற்சிகளை ஊக்குவிக்கின்றேனா ?**

இவ்விதமாக ஆசிய நாடுகளில் ஒவ்வொருவரும் நாடும் வெவ்வேறு மாதிரி. இந்நாடுகளில் இன்னும் கிறிஸ்துவர்கள் சிறுபான்மையினரே, ஆனால் அவர்கள் 'பூமிக்கு உப்பாக' இருக்க முனைகிறார்கள். சில நேரங்களில் மிக மறைவான வழியில் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு, அவர்கள் நம்பிக்கை அளிக்கின்றனர்.
அவர்களோடு அவர்களின் ஆழமான ஒற்றுமைமைக்கு துணைநிற்கும் நோக்கில், கிறிஸ்துவை நேசிக்கிற அனைவரோடும், கொண்டாடவும், தொடர்புகளை ஆழப்படுத்தவும் நாம் ஆசிக்கிறோம்.

2014ம் ஆண்டில், சிறப்பாக அமெரிக்க இளைஞர்களுக்கு செவிமடுப்போம். ஏப்ரல், மே மாதங்களில், கூட்டங்கள் டெக்ஸஸிலும் (ஆஸ்டின், டல்லாஸ் மற்றும் ஹ்யூஸ்டன்), மே மாத தொடக்கத்தில் மெக்ஸிகோவிலும் நடைபெறும். பிறகு அக்டோபரில், தொமினிக்கன் குடியரசில் கூட்டமும், அதை தொடர்ந்து ஹய்டீ, மற்றும் கரீபியன் தீவுகளுக்கு பாத யாத்திரையும் நடைபெறும்.

'**புதிய ஒருங்கிணைப்பை நோக்கி**' எனும் மடல், இந்த பொதுப்பயணத்தின், அடிப்படை தத்துவமாக அமையும். இப்பயணம், 2015ஐ நோக்கி நம்மை இட்டுச்செல்லும். (கீழே 2015க்கான திட்டத்தை காணவும்.) இது எதிர்வரும் ஆண்டில், 'இயேசுவை அன்பு செய்யும் அனைவரின் மத்தியில் கண்கூடாகத் தெரியும் தொடர்புகளை காண துணை நிற்கும்'.
இத்தேடுதலில் துணைபுரிய, 4 திட்டங்கள் இதோ:

## 2014ன் திட்டங்கள்

*இயேசுவை அன்பு செய்யும் அனைவர் மத்தியில் வெளிப்படை யன தொடர்பு காண்பது. இயேசு, அவரது நட்பை, (எவரையும் ஒதுக்காமல்) அனைவரோடும் விரிவுபடுத்திக்கொண்டார். பூமி முழுவதும் இயேசுவை அன்பு செய்யும் அனைவரும், அவருடைய பாதையில், நட்பு என்னும் மிகப்பெரிய சமுதாயத்தை உருவாக்குகிறார்கள். இதைத்தான் நாம் தொடர்பு என்கிறோம். இதன் காரணமாக, மனுக்குலத்திலுள்ள அனைத்து காயங்களையும், குணப்படுத்துவதில் துணைநிற்கிறது. அதுவும், எவரையும் வற்ப்புறுத்தாமல், எவர் மீதும் திணிக்காமல், ஒரு உலகளாவிய ஒருங்கிணைப்பை (எந்த மக்களையும், எந்த ஒரு தனி மனிதனையும் விட்டுவிடாமல்) ஊக்குவிப்பது.*

**எவ்வாறு ஒவ்வொரு மனிதனும் இதில் பங்கேற்கலாம் ?**

## முதல் திட்ட வரையறை

*உள்ளூர் செபக்குழுவில் இணைதல்.*

‘ஒருவர் மற்றவரிடம் அன்பு செய்யுங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்துகொள்வர்’ (யோவான் 13,34)

ஒரு சில நிகழ்வுகளில், உதாரணமாக, அகில உலக கூட்டங்களில், நட்பின் சமூகம் மிக வெளிப்படையாக காணமுடிகிறது. ஆனால், இம்மாதிரியான நிகழ்வுகள் அடிக்கடி நடப்பதில்லை. ஒவ்வொரு இடத்திலும், அது மிக வலிமையற்றதாக இருந்தாலும் கூட, இம்மாதிரியான பெரும் சமூகத்தின் இருப்பு அனைத்து சமுதாயங்களில் காணப்படுகிறது. விசுவாசத்தில் நாம் மட்டும் தனித்து வாழ்வது இயலாத ஒன்றாகும். இயேசு தான், தடைசெய்யப்படாத ஒற்றுமையின் புதையல் என்று கண்டுணரும்போது, அவ்வுண்மையை பகிர்ந்து கொள்ளும்போது, நம் விசுவாசம் பிறக்கிறது.

கள சமூகங்கள் (பங்குகள்), குழுக்கள் மற்றும் திருத்தொண்டர்களின் பணிகள் எல்லாம், நட்பின் விளைநிலங்களானால் எப்படியிருக்கும்! அவை, நல் ஆரோக்கியமான வருகை புரியும் இடங்களாக, ஊக்கமளிக்கும் கூடங்களாக, நலிவுற்றோருக்கும், அயல்நாட்டினருக்கும், இதுவரை நாம் நம்முடைய கருத்துகளை தெரியப்படுத்தாத மக்களுக்கும் செவி மடுக்கின்ற தலங்களாக இருந்தால் எப்படியிருக்கும்#!

- **அனைவருக்கும் ஓர் ஆலோசனை ஞாயிறு வழிபாட்டிலும், தேர்வுசெய்யப்படாத மக்களிடையேயும், மற்றும் சில செயல்பாடுகளிலும் உன்னால் ஒற்றுமை உணர்வை அனுபவிக்க முடிகின்றதா?**
- **மேய்ப்புப் பணி தலைவர்களுக்கான ஆலோசனை இளைஞர்களுக்கு செவிமடுங்கள். அவர்கள் சமுதாயத்திற்கு கொண்டு வருவனவற்றை, பகுத்துணர்ந்து அங்கீகரியுங்கள். இதை முதியவர்களையும் உணரச்செய்யுங்கள்.**

## இரண்டாம் திட்ட வரையறை

*நம்மை வரையரைப்படுத்தும் எல்லைகளுக்கு அப்பால் நட்பை விரிவுபடுத்துங்கள்.*

‘மிகச்சிறியோராகிய என் சகோதர, சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம், எனக்கே செய்தீர்கள்’. (மத் 25,40)

இயேசு, தான் சந்தித்த ஒவ்வொருவருக்கும், குறிப்பாக, ஏழைகள், குழந்தைகள், எவரெவர் முக்கியமற்றவர் என கருதப்பட்டார்களோ அவர்கள் அனைவருக்கும் செவிமடுத்தார். அவரைப்பின் தொடர்ந்து, நாமும் எல்லைகளையெல்லாம் கடந்து தேவையுள்ளவர்களோடு இணையலாம். பலவித கோட்பாடுகள் உள்ள, பிற கிறிஸ்தவர்ளோடும் மற்றும் நம்முடைய விசுவாசத்தில் பங்கு கொள்ளாதவர்களோடும் கூட நாம் ஒற்றுமை செயல்பாடுகளை நிறைவேற்றலாம்.

ஏழ்மையென்பது பொருளாதார ரீதியானாலும் (அ) ஆன்மீகமானாலும், ஒற்றுமை என்றாலே, உதவிக்கரம் நீட்டுதல், பெறுதல் ஆகிய இரு குணங்களை உள்ளடக்கியிருக்கிறது. நாம் பொதுவாகவே, பெறுபவர்களாகத்தான் இருக்கிறோம்.

- **அனைவருக்கும் ஓர் ஆலோசனை் ஓராண்டிற்கு, நமது அண்மையில் உள்ளவர்களின் சூழலைப்புரிந்து கொண்டு நமது நட்பை அவர்களுக்கு ஏன் அளிக்கக்கூடாது?**
- **புறக்கணிக்கப்பட்டவர்கள், ஏழைகள், உடல் நலம் குன்றியவர்கள், ஊனத்தினால் துயறுருவோர், ஆதரவற்ற குழந்தைகள், குடிபெயர்ந்தோர் மற்றும் வேலைவாய்ப்பு இல்லாதோர்களிடம் நமது அன்பை ஏன் செலுத்தக்கூடாது?**
- **மேய்ப்புப்பணி தலைவர்களுக்கான ஆலோசனை் எங்கெல்லாம் ஒற்றுமை தேவைப்படுகிறதோ, இயலுமோ, அவற்றைக் கண்டுணரச் செய்ய இளைஞர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.**

## மூன்றாவது திட்ட வரையரை

*தொடர்ந்து பிறரோடு பகிர்ந்து கொள்ளுதலும், மற்றும் செபிப்பதும்*

*இரண்டு அல்லது மூன்றுபேர், என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாக கூடி இருக்கிறார்களோ, அங்கு அவர்களிடையே நான் இருக்கிறேன். (மத் 18,20)*

*சில இளைய சமுதாயத்தினர், கடினமான சோதனைகள், புறக்கணிக் கப்படுதல், தனிமைப்படுத்துதல் (அ) அநியாயங்களைக் குறித்த விழி ப்புணர்வு ஆகியவைகளால், கடவுளின்மேல் விசுவாசம் கொள்ளமுடியாத நிலைமைக்கு தள்ளப்படுகிறார்கள். விசுவசிப்பது எப்போதுமே ஒரு சவால் மற்றும் சவாலான நம்பிக்கைதான். என் விசுவாசத்தைக் குறித்து எவருடன் பயணிப்பது மற்றும் சிந்திப்பது.*

- ***அனைவருக்கும் ஓர் ஆலோசனை தன்னுடைய கேள்விகளுக்கு தனிமையாக விடை தேடுவதைவிட, வாரத்தில் ஒருமுறையோ (அ) மாதத்தில் ஒருமுறையோ, மற்றவர்களோடும் பகிர்ந்து தேடுவது நல்லது. அனைவரும் ஒருமித்து ஒரு நற்செய்திப் பக்கத்தை (அ) வேறு ஏதாவது வாசிப்பது. பாடல்களோடு செபி ப்பது, நற்செய்தி வாசிப்பது, நீண்ட அமைதி காப்பது.***
- ***கள மேய்ப்புப்பணி தலைவர்களுக்கான ஆலோசனை் இம்மாதிரியாக பகிர, செபிக்க ஏற்ப்படுத்தப்பட்டுள்ள சிறு குழுக்களுக்கு ஊக்குவிப்பும், ஆதரவும் தெரிவித்து, அவர்கள் திறந்த மனதுடனும், மற்றவர்களை வரவேற்ப்பவர்களாகவும் மாற உதவிக்கரம் நீட்டுவது.***

## நான்காவது திட்ட வரையரை

*யாரொருவர் கிறிஸ்துவை அன்பு செய்கிறார்களோ, அவர்களின் ஒற்றுமையை வெளிப்படையாக மற்றவர்களும் கண்டுணரச்செய்வது.*

*நீங்கள் கிறிஸ்துவின் உடல் (1 கொரிந்தியர் 12,27)*

*நம்முடைய கிராமத்தில், நகரத்தில், வட்டாரத்தில், இயேசுவை அன்பு செய்யும் மக்களும் உள்ளனர், ஆனால் அவர்கள் நம்மைப்போன்றல்லாமல் வேறு விதமாக செயல்படுகின்றனர்.*

*நாம் நம்மை 'கிறிஸ்தவர்கள்' என்று கூப்பிடுவது, கிறிஸ்துவின் பெயரை தரித்திருக்கிறோம் என்றுதான் பொருள். கிறிஸ்தவர்களுக்கான அங்கீகாரத்தை, நம்மை கிறிஸ்துவோடு இணைக்கும் திருமுழுக்கினாலேதான் பெறுகிறோம். நம்மில் நிலவும் பிரிவினை வேறுபாடுகளுகல்ல, நம்முடைய பாரம்பரியமிக்க பொது அடையாளத்திற்கு, வெளிப்படையாகவே முக்கியத்தும் அளிக்க முயல்வோம்.*

*தவிர்க்க முடியாத பாகுபாடுகள் தோன்றும்போது, அது நம் பிரிவினைக்கு காரணமாக இருக்கலாகாது. கிறிஸ்து, தனது வாழ்க்கையில் எல்லைகளுக்கு அப்பால் சென்றார், மற்றும் சிலுவை வழியாக, பிளவுபட்டிருப்பவர்களின் மத்தியில் தனது கரங்களை ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்கு ஒன்று சேர்க்கும் விதமாக விரித்தார். கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை பின்பற்றி, உலகில் கடவுளின் ஒளியை பிரகாசிக்க செய்யவேண்டுமெனில், அவர்கள் பிளவு பட்டிருக்கலாகாது. தூய ஆவியே நம்மை ஒருங்கிணைக்கிறார்.*

*அனைவருக்கும் ஓர் ஆலோசனை நாம் ஏன், வேறுபட்டவர்கள், வேறு குழு, வேறு பங்கு, வேறு இயக்கம், மற்றொரு பிரிவு, குடிபெயர்ந்த கிறிஸ்துவ சமுதாயத்தை நோக்கி செல்லக்கூடாது ? அவர்களை நாம் சந்திக்க செல்லலாம், அவர்கள் நம்மை வரவேற்கட்டும், அவர்களை நாமும் வரவேற்ப்போம். நாம் ஒற்றுமையாக, ஒரு கூரையின் கீழ் கிறிஸ்துவுடன் சிறு செபத்தின்மூலம், மற்றவருடன் சுமுகமான முழு ஒற்றுமை நிலவும் சூழல் மலரும்வரை காத்திராமல், இப்பொழுதே இணைவோம். இப்பேர்ப்பட்ட வருங்கால, பிளவுபடாத, உறுதியான ஒற்றுமைக்கான ஒத்திகையாகக் கொண்டு வாழலாமே.*

- ***கள மேய்ப்புப்பணி தலைவர்களுக்கான ஆலோசனை மேய்ப்புப்பணியில் எதையெல்லாம் மற்ற பிரிவினை கிறிஸ்தவர்களோடு ஒற்றுமையாக செய்ய முடியுமோ, அவற்றை எல்லாம் செய்வோம். மற்றவர்களை கணக்கில் கொள்ளாமல் எதையும் செய்யக்வேண்டாம்.***

# 2015 தெஸ்சேவில் புதிய ஒருங்கிணைப்பை நோக்கி

சமூகத்தின் 75ம் ஆண்டு

சகோதரர் ரோஜரின் 100வது பிறந்த நாள் நினைவு
(12 மே 1915 முதல் ௭ 16 ஆகஸ்ட் 2005 வரை)

## மே 2015

– இளைய சமுதாயத்தினர், தாங்கள் வாழும் இடங்களில் கூடி செபித்து ஒருங்கிணைப்பை வெளிக்கொணர அழைக்கப்படுகிறார்கள். சகோதரர் ரோஜரை நினைவுகூரும் இவ்வேளையில், கிறிஸ்துவை பின்பற்ற அவர் தரும் அறைகூவலை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

– மே மாதம் 10ம் தேதி (ஞாயிறு) மதியம் சமூகம், மக்களை தத்தம் பகுதியிலிருந்து நன்றியறிதல் செபத்திற்காக தெஸ்சேக்கு வர அழைப்பு விடுக்கிறது.

## கோடைக்காலம் 2015

ஒவ்வொரு வாரமும், ஞாயிறு முதல் அடுத்த ஞாயிறுவரை கடந்த 3 ஆண்டுகளை நிறைவுசெய்யும் விதமாக, அனைத்து கண்டங்களிலிருந்தும், இளம் வாலிபர்களின் ஒருமித பயணித்தை, கருத்தரங்குகள் மற்றும் உலகலாவிய கூட்டங்கள் மூலம் நிறைவுற செய்வது.

– ஜூலை 5 ௭12 சன்னியாசம், துறவற வாழ்வில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கான கூட்டம். சிந்தனைத் தலைப்பு ‘இன்றைய காலகட்டத்தில் துறவு அழைப்பு ஏற்றதா’.

– இந்த தலைப்பில் கத்தோலிக்கர், ஆர்தொடாக்ஸ், பிரிவினை சகோதரர்கள், துறவற சமூகத்தினர் மற்றும் சமுதாயத்தினர் பங்கு கொள்வார்கள்.

– ஆகஸ்ட் 9 ௭16 ‘புதிய ஒருமைப்பாட்டிற்கான இளைஞர் கூட்டம்’.

– ஆகஸ்ட் 16 (ஞாயிறு) மதியம் திருச்சபை தலைவர்கள் தலைமையில், சகோதரர் ரோஜர் நினைவாக, நடத்தப்படும் நன்றியறிதல் செப வழிபாட்டிற்கு மக்களனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

– ஆகஸ்ட் 30 ௭ செப்டம்பர் 6 ‘இறையியல் சிந்தனையில் சகோதரர் ரோஜரின் பங்கு’ என்ற தலைப்பில், இளம் இறையியல் மாணாக்கருக்கான சர்ச்சையுடன் கூடிய கருத்தரங்கு.

இதில் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருக்கும், பிரிவினை சகோதரர்கள், ஆர்தொடாக்ஸ் மற்றும் கத்தோலிக்க இறையியல் வல்லுனர்கள் அறிக்கைகளை சமர்ப்பிப்பார்கள்.

Bro. JPatrick, Taizé Community, 71250 Taizé, France **www.taize.fr**